உ

கணபதிதுணை.

வாசகக் குறிகள்.

இஃது

திருமயிலை

துரைசாமிமுதலியாரவர்களால்

எழுதப்பட்டு,

சைதாபூர் வித்துவான்

வி. சுந்தரமுதலியாரவர்களால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

[2-வது பதிப்பு]

1908.

விலை அணா ½.

உ

கணபதிதுணை.

வாசகக்குறிகள்.

நான்முகம்.

எப்பாஷையிலும் இலக்கண இலக்கியங்களுக்கு நிறுத்தல் குறிகள் உண்டு. அவைகள் வாக்கியங்களும், கவிகளும் விளங்க அர்த்தமாவதற்கு இடும் அடையாளங்களாம். சிலர் அவ்வடையாளங்களையேஉபயோகிக்காமல்எழுதுவது உண்டு; சிலர் தெரிந்திருக்கும் சில குறிகளை மட்டும் உபயோகித்து மற்றவைகளை விட்டுவிடுவதும் உண்டு; பின்னும் சிலர் அறிந்திருந்தும் அவைகளை உபயோகிக்காமலே வேணுமென விட்டுவிடுகிறார்கள். அந்தக்குறிகளை நன்றாயறிந்து தக்கசமையத்தில் உபயோகித்தால் மட்டும் வாசகங்களும், கவிகளும் தெள்ளத்தெளிய அர்த்தமாவதன்றி அழகாயுமிருககும். அதை அநுபோகத்தில் காண்க. இவைகளைப்பற்றிய விதிகள் ஏதும் தமிழ் இலக்கணத்திலாவது, நன்னூல் - தொன்னூல்-தொல்காப்பியத்திலாவது இருப்பதாகக்காணாததினால், அவை இன்னின்னவை யென்றும், அவைகள் உபயோகிககத்தக்க இடங்கள் இன்னவை யென்றும் உதாரணத்தோடு சொல்ல வேண்டியது அவசியந்தான். எல்லா குறிகளும் இன்னவையென்று

ஒரேயிடத்தில் சொல்லிய பிறகிட்டு, ஒவ்வொரு குறியின் உபயோக இடங்கள் இன்னவையென்று வரிசையாகக் கிரமப்படுத்திச் சொல்லி முடிப்போம்.

குறிகள்.

, கால்புள்ளி (காமா)

; அரைப்புள்ளி (செமிகோலன்)

: முக்கால்புள்ளி (கோலன்)

. முற்றுப்புள்ளி (புல்ஸ்டாப்)

“ ” மேற்கோள்குறி (கொடேஷன்)

‘ ’ உள் மேற்கோள்குறி.

( ) விளக்கக்குறி (பிராக்கெட்)

— கீறுபுள்ளி (டாஷ்)

- சிறுகீறுபுள்ளி (ஹைப்பன்)

* நட்சத்திரப்புள்ளி (ஸ்டார்மார்க்)

† சிலுவைக்குறி.

△ வரிப்பளவுக்குறி.

! ஆச்சரியம் அல்லது இரக்கக்குறி.

? வினாக்குறி.

பின்னும் சிலகுறிகளிருப்பினும், அவை வழங்காமலிருப்பதால், அவைகளை இவ்விடத்தில் சொல்லாமல் விட்டு, மேல் காட்டியவைகளின் உபயோகத்தைத் தனித்தனியாகப் பிரித்துச் சொல்வோம்:

o

(1). இந்த காமாவாகிய கால்புள்ளியை பலவினை எச்சங்களின் மத்தியிலும், ஆனல் - ஆயினும் - ஆனலும்-ஆகவே-ஆகையால் முதலிய சொற்களின் கடையிலும், ஒருவாக்கியத்தில் வரும் பல ஒரேவித சொற்களின் மத்தியிலும், சலகதி முடியாத பலமுற்றுக்களின் கடையிலும், வாக்கியத்தின் மத்தியில் வந்தால் - போனல் என்பது போல ஆல் என்னும் இடைச் சொல்லின் பின்னும், ஐயா - மன்னவா - பத்திராதிபரே என்னும் எட்டாம் வேற்றுமையின் பின்னும் உபயோகிக்க வேண்டும்; ஆனல், ஒருவாக்கியத்தில் பல வினை எச்சங்கள்வரின் கடைசியில் வரும் வினை எச்சத்தின்பின் அக்குறி (காமா) இடாமல் விடவேண்டும்.

(a) பலவினை எச்சங்களின் மத்தியில் காமா உபயோகிப்பதற்கு உதாரணம்.—ஆசனூர்காட்டிலுள்ளதின் பத்திலிருக்கும் துஷ்ட மிருகஜாதிகள் திறம்பாத ஆண்மையுள்ள திடபுருஷரும் திகைக்கும்படி குளிறி, பிளிறி, குலைத்து, கூவி, காசசித்து, ஊளையிட்டது இத்தன்மையதென்று எவ்வளவேனும் சொல்ல நான் சாத்தியனல்ல.

(b) ஆனல், ஆயினும், ஆகவே, ஆகையால் என்னும்சொற்களுக்குப்பின் காமா வருவதற்கு உதாரணம்.—(அந்த சொற்களுக்குமுன் செமிகோலன் என்னும் அரைப்புள்ளி வரவேணடும. அதை அரைப்புள்ளி சொல்லுமிடத்தில் குறிப்போம்.) சைனதேசத்துப் பிரஜைகள் க்ஷாமகாலத்தில் நரமாமிசத்தைப் புசித்தார்கள்; ஆயினும், இங்கிலீஷ் துரைத்தனத்தார், அவ்வழக்கம் தீதென்றுக் உடனே விலக்கினர்கள். நானிந்த கொள்ளைகாலத்தைவிட்டு சென்னைக்கே குடிபுகத் தீர்மானித்திருந்தேன்; ஆனலும், ஐயோ! என்மனம சிலதினங்களுககுள் மாறிப்போயிற்று. அன்றியும், சிலகாலம் இங்கேயே இரு

க்க நினைத்தேன்: ஆனது பற்றியே, நான் வெளிதேசத்தில் அடையும் விர்த்தியை யிழந்தேன்.

(c) ஒரே வித சொற்களின் மத்தியில் காமா வருவதற்கு உதாரணம்.—(1) மது விலக்கு, மன அடக்கம், அமைதி, சுகம், ஜனசங்காத்தம், நாநாவித நற்காலக்ஷேபம், இசசிக்கத்தகும் சகல இன்பங்கள், இவை எல்லாம் மத்திமநிலைமையில் இருப்பவர்களுக்கு உரிய நல்வரங்கள். (2) என்னுடன் நேசித்த அந்தபாதகன், சிரசில் தரித்துச் செங்கோல் செலுத்தும் எனது கிரீடம், என்னிருகண்மணியிலும் அரியதாரம், இவ்வுலகில் எவ்வகைச் செல்வத்தையும் பெற்று அனுபவிப்பதற்கு ஆதாரமாகிய சீவன், இம்மூன்றையும் ஏககாலத்தில் அபகரிக்க எனக்கு விஷமிட்டான்.

(d) பல ஒரேவித முற்றுக்களின் மத்தியில் காமாவருவதற்கு உதாரணம்.—வச்சநாபி என்னும் விஷம்வைக்கவே, நான் அதை அறிந்து அங்ஙனம் விஷமிட்டவன் இன்னனென்று அறியவேண்டி அந்த நிமிஷந் தொடங்கி நான் தரித்த வஸ்திரம் விகாரம், பேசின பேச்சுவிகாரம், செய்த செய்கைகள் விகாரம், நடந்த நடகை விகாரம், யாவும் அணுவும் தவறாமல் விகாரமாகவே நடித்தேன்.

(e) வாக்கியத்தின் மத்தில் ஆல் என்னும் இடைச்சொல்லுக்குப் பின் காமா வருவதற்கு உதாரணம்.—(1) நான் கொண்ட ஆநந்தப்பரவசத்தின் சமையத்தில என் சிரசில் குல்லாவிருக்குமானல், சடுதியில் சிலிர்த்தரோமம் அந்தக் குல்லாவை அதிர்ச்சியாய் வீசி அப்புறப்படுத்தும் என்பதற்கு ஐயமில்லை. (2) விடுதலைபெருமலிருக்கிற அடிமைப்பெண்ணுணுடனே ஒருவன் சயனித்தால், அவள் விடுதலை பெருதவளாதலால், அவ்விருவரும் அடிக்கப்படவேணடுமே.

(f) ஒரு வாக்கியத்தில் வரும் பல-உம்மென்னும் இடைச் சொற்களின் பின் காமா வருவதற்கு உதாரணம்.—நீங்கள் தேசப் பயிரை அறுக்கும்பொழுது உங்கள் வயலோரத்திலிருக்கிற யாவும் அறுமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப்பொறுக்காமலும், உங்கள் திராக்ஷத் தோட்டத்தில் சேஷமானதைச் சேகரியாமலும், அதிற் சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை தரித்திரருக்கும் பரதேசிகளுக்கும் விட்டு விடுங்கள்.

(g) எட்டாம் வேற்றுமை அதாவது ஐயா என்னும் சொல்லைப் போன்றவைகளுக்குப்பின் காமா வருவதற்கு உதாரணம்.—ஐயா பத்திராதிபரே, வந்தனம். சங்கதி என்ன லட்சுமணு, பதறுமற் சொல்லென்றுன. அளவற்ற ஞானமும் ஜீவகாருண்யமுமுள்ள திருவுள்ளமே, என்னை இந்த ஆபத்தினின்றும் காப்பாற்றும்.

(h) முடிந்த வாக்கியத்தின் பின் அதாவது நூதன வாக்கியத்துக்கு முதலில் பின்னும், அன்றியும் என்னும் சொற்கள் வந்தால், அசசொற்களின்பின் காமா வரவேண்டும். அதற்கு உதாரணம்.—இஸ்டிரியா என்னும்வியாதியானது மாணிடரை ஆவேசம் வந்தவர்களைப்போல ஆட்டுவிப்பதல்லாமல், ஆகாயத்திலும் அந்தரமாக தூக்கிவீசி எறியும். அன்றியும், அவ்வியாதியஸ்தர்கள் வாத்தியங்களுக்கிணங்க நடனஞ் செய்வார்கள். சிரசிலுள்ள கத்திரிபோன்ற தொந்தமுள்ள இரண்டு நரம்புகளின் பிரிவினுல் இவ்வியாதி உண்டாகின்றது. பின்னும், அது மனைவி கருப்பத்தினுல் உண்டாவதும் இயற்கைதான். இதை சாதாரண ஜனங்கள் பிசாசு பிடித்ததென்றும் பிடாரிபிடித்ததென்றும் சொல்லி அதற்கு ஆவாகனமுமிடுவார்கள். இது சுத்தபைத்தியமே தவிர மற்றபடியல்ல. இப்

பூலோகத்திலும் மற்றெந்த அண்டத்திலும் திருவுள்ளத்தை யன்றி பிசாசமென்று பேரிடத்தக்க பொருளே கட்டோடே கிடையாது. அன்றியும், தேவ இச்சைக்கு விரோதமாக நடக்கும் எவ்வஸ்துவும் எவ்விடத்திலும் எக்காலத்திலும் இராதென்றே மனசாக்ஷி கூறுகின்றது.

(2) ; இந்த செமிகோலனாகிய அரைப் புள்ளிப் பல முற்றுக்களின் மத்தியிலும், ஆனால் - ஆயினும் - ஆனாலும் என்னும் சொற்களின் முன் அதாவது முடிந்த வாக்கியத்தின் பின் அந்தச்சொற்கள் வந்தால், அந்த முடிந்த வாக்கியத்தின் பின்னும் உபயோகிக்கப்படும்.

(a) பல முற்றுகளின் மத்தியில் அரைப்புள்ளி வருவதற்கு உதாரணம்.—துஷ்டவன விலங்குகள் சூழ்ந்த இந்தக் கொள்ளேகாலத்தில் தனியனாய் உதவியற்றிருந்த நான்எனது தமயன் வரப்பெறவே, எனக்குண்டான ஆனந்தப் பரவசத்தினால், நான் அவருக்கு முத்தம் கொடுத்தேன்; அவரைக் கட்டித்தழுவி அணைந்தேன்; கதறி அழுதேன்; மகிழ்ந்து நகைத்தேன்; அகம் களித்து ஆரவாரித்தேன்; துள்ளிக்குதித்து ஆடினேன்; ஆனந்தங்கொண்டு பாடினேன்; பரிவு கூர்ந்து ஓலமிட்டேன்; கரங்களைப் பிசைந்து முறுக்கினேன்; ஆவலங்கொட்டி என் தலையில் அடித்தேன்; உன்மத்தனைப்போலப் பின்னும் பாடித்துள்ளிப் பாய்ந்தேன். என் சகோதரனைக் காணவே, எனக்கு அவ்வித பதைப்பு உண்டாயிற்று.

(b) முடிந்த வாக்கியத்தின் பின் ஆனாலும், ஆயினும், ஆனால் என்னும் சொற்கள் வந்தால், அந்த வாக்கியத்தின்பின் அரைப்புள்ளி வருவதற்கு உதாரணம்.—நான் இக்கொள்ளேகாலம் வந்தபோது எனது ஜீவனவகைக்கு ஒரேரூபாய்தான் வைத்திருந்தேன். வேறுகதியில்லை; ஆனாலும், சர்வசிருஷ்டி

களையும் அதததற்கு ஏற்றபடி பாதுகாத்து ஆண்டு நடத்திவரும் அளவற்ற ஞானமும் ஜீவகாருண்யமுமுள்ள மகத்தான கடவுள் எனக்குக்காலமறிந்து வயிற்றுண்டி கொடுத்துக்காப்பாற்றி வருகிறார். அதனால், இவ்விடத்தில் ஒருவாறு க்ஷேமமாய் காலக்ஷேபம் செய்துவருகிறேன். ஆயினும், இது என்னைப்போன்ற உல்லாச ஆவலுள்ள சென்னை வாசிகளுக்கு இசைந்த நாடல்ல; ஆனால், கேள்விமுறையற்ற அநியாய சிம்மாசனாதிபதிகளுக்கும் வெளிநாக்கு அமுதம் - உள் நாக்கு நஞ்சுமான வஞ்சகர்க்கும் தக்கஇடந்தான். (பின்னும்இதற்கு வேண்டிய உதாரணத்தை முதல்கலம் (b) என்னும் உட்பிரிவில் காண்க. விஸ்தாரமாகச்சொல்லில்பத்திரிகையில்விரியும்.

(3) . இந்த (புல்ஸ்டாப்) முழுப்புள்ளி முடிந்த வாக்கியத்தின் கடைசியில் வரும்அதற்கு உதாரணம்.—ஆதியிலே வாக்கிருந்தது. அவ்வாக்கு தேவனிடத்திலிருந்தது. அவ்வாக்கே தேவன். அது ஆதியிலே தேவனிடத்திலிருந்தது. அதனாலே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டன. சிருஷ்டிகளுக்குள்ளே அதனால் சிருஷ்டிக்கப்படாத சிருஷ்டி ஒன்றுமில்லை. அதனாலே சீவனுண்டாயிருந்தது. அந்த சீவன் மனுஷனுக்கு ஒளியாயிருந்தது. அந்தஒளிஇருளிலே பிரகாசித்தது. இருள் அதைப் பற்றிக்கொள்ளவில்லை. (இந்த முழுப்புள்ளியை அரைப்புள்ளி வருமிடத்திலும், கோலன் வருமிடத்திலும், ஆச்சரியக்குறி-கேள்விக்குறி வருமிடத்திலும இடுவது சுத்தப்பிசகு. இக்குறியை தக்க இடத்தில் இடுவதே அழகாம்.

(4) : (கோலன்) இந்த முக்கால்புள்ளியைக் கொடேஷன் என்னும் குறிவரும் வாக்கியத்தின் முன்னும், ஆகவே - ஆனது பற்றி - ஆகையால் என்னும் சொற்களுக்கு முன்னும் அதாவது முடிந்த வாக்கியத்தின் பின்னும் குறிக்கவேண்டும்.

(a) கொடேஷனுக்கு முன்னே கோலன் வருவதற்கு உதாரணம் வருமாறு:—என் அன்னை உன்னை நோக்கி: "சொல்லக்கேள்மைந்தா, நீ காடு அடர்ந்த அந்தக்கொள்ளை காலத்திற்குப் போகாதே. உனது ஜீவதிசைக்கு வேண்டிய சகாயத்தை இருக்குமிடத்திலேயே கொடுப்போம். ஸிராகரித்துப் போனால், எவரும் படாதபாடுபட்டு வருந்துவாய்" என்று முன்னதாகச் சொன்னதைக்கேளாமல் அலக்ஷியம் செய்தேனே, அதை இப்போது அனுபவிக்கிறேன். எனக்குப் பிறகு தர்மாலயத்தில் உள்ள லிகிதவேலையில் சிலகால சர்விசு உண்டானதினால், அதைவிட்டு வெளியில் என் நாடுசேர வகையில்லை. அவர் அப்போது "நிச்சயமாய்ப் போவாயோ?" என்று கேட்க: "ஆம், போகத்தான் வேண்டும். பள்ளிப்பழக்கத்தை துராக்கிரகமாக பயிலாமல் விட்டு மூடனாய்விட்ட எனக்கு ஜீவனசகாயம் அவ்விடத்தில் தான் கிடைக்கும் போலும்." என்றேன். அன்னை என்னைத் தட்டிக்கொடுத்து, "நல்லது மைந்தா, நீ அவ்விடத்திற்கு உனதிஷ்டப்படிக்கு போ. அங்கு நீ பட்டினியாய் வருந்த நேர்ந்தால் நானுனக்கு உதவிசெயவேன். நான் சக்தியற்றவளானால்: உன்னைக் கடைக்கண்ணாலாயினும் பார்த்துத் துணைநிற்கும்படி ஜீவகாருண்யமுள்ள பகவானை நோக்கிக் கூப்பிட்டுப் பிரார்த்திப்பேன். அஞ்சாமல் போவாயாக" என்றார்.

(b) ஆனதுபற்றி என்னும் சொல்லின்முன் அதாவது அந்த சொல்லுக்குமுன் வந்த முடிந்த வாக்கியத்தின் பின் கோலன்வருவதற்கு உதாரணம்:—அவர் சொன்னவாக்கைத் தவறாமல் முடித்தேன்: ஆனதுபற்றி, அவர் உயிரோடிருக்கும் வரையில் அன்ன வஸ்திரங்களுக்கு எதும் குறையின்றி யிருந்தேன. இப்போது எனது குடும்பம் நாளடைவில் பெருகவே, வறுமையும் தலைநீட்டி ஓங்கி வளருகின்றது. இதை இப்பத்தி

ராதிபரும் அறிவர்: ஆகையினாலேயே, அவர் என்னை இப்பத்திரிகை கட்டணத்தைக் கேட்கவுமில்லை; கேட்க விரும்பவுமில்லை. அப்படிக்கேளாததே என்கழுத்தை அரங்கொண்டு அறுப்பது போலவாம்.

(5) " " (கொடேஷன்) இந்த அந்நியவாக்கியக் குறியை வேறு வாக்கியத்தை எடுத்துச் சொல்லுகையில், எடுத்தெழுதிய வாக்கியங்களின் ஆதியிலும் கடையிலும் குறிக்க வேண்டும். அதாவது எடுத்த வாக்கியத்தின் ஆதியில் இரட்டைக் காமாக்களை தலைகீழாக இட்டு, அவ்வாக்கியத்தின் கடையில் அதே இரட்டைக் காமாக்களை உள்ளபடி எழுத வேண்டும். அதற்கு உதாரணம்.—(1) நான் எழுதிய எனது சொந்த பிறப்பு வளர்ப்பு (Life)சரித்திரத்தில் கிரிஸ்தவ வேதத்திலிருக்கும் லேவியர் ஆகமம் 17-வது அதிகாரம் 14-வது வசனத்தில் "எந்த ஜெந்துவின் ஜீவனும் அசனிரத்தத்திலிருக்கிறதினால், எந்த ஜெந்துவின் இரத்தத்தையும் நீங்கள் புசிக்க வேண்டாமென்று சொன்னார்" என்னும் வாக்கியத்தை அதற்கடுத்த சமையத்தில் எழுதியிருக்கிறேன். (2) நான் முதலில் கொள்ளை காலம் வரும்போது, வனேந்திர வழியில் எனது வேலைக்காரன் ஓடிவந்து: "எஜமானே! எஜமானே துக்கம் மேலிட்டது! தீமை வந்தது!" என்று பதறி உதறி ஓலமிட்டான். நான்: "சங்கதி என்ன? சின்னப்பையா, பதறாமற் சொல்" என்று கேட்க, அதற்கு அவன்: "சொல்வது என்ன? அதோ பாரும் பட்டைப் பட்டையாக வரைந்த அகோரமான பெரும்புலி!" என்றான் அம்மட்டில் அவன் மூர்ச்சித்து விழுவானென்று அறிந்து: "சின்னப்பையா இங்கேவா, அஞ்சாதே, காருண்யபகவான் துணைநிற்பார்" என்று அவனை ஆற்றித் தேற்றி மரமேறி அவ்விடத்தில் அன்று காலங்கழித்து துணை கூடிய பின் இறங்கி வந்து வழிகூடினேம்.

(6) ' ' இது உள் கொடேஷன் இதை மேற்சொன்ன கொடேஷனுக்குள் அப்படிப்பட்ட வாக்கியம் அல்லது வார்த்தை வந்தால், அந்த வார்த்தை அல்லது வாக்கியத்தின் முன்னும் பின்னும் மேற்கூறியவாறு குறிக்கவேண்டும். இதற்கு உதாரணம்.—அவன் என்னை நோக்கி: "நீர்சொன்ன சங்கதிகளை நான் அவனிடத்தில் சொல்ல, அவன்: 'அப்படியே நிறைவேற்றுகிறேன்' என்றான்" என்று சொன்னான்.

(7) ( ) (பிராகெட்) வருவிக்கப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட சொல் அல்லது வாக்கியத்துக்கு இடும் குறி. உதாரணம்.—இராமன் லக்ஷமணனோடு இலங்கைக்குச் சென்று வானரசேனைகளை விட்டு இலங்கையிலிருந்த இராவணன் சேனையைக் கொல்லுவித்தபின் தானே (இராமனே) அவனுடன் (இராவணனுடன்) கைகலந்து யுத்தஞ்செய்து அவனையும (இராவணனையும்) கொன்றபின் அவனுடைய (இராவணனுடைய) தம்பிக்குப் பட்டங்கட்டினான். (2) எவரும் தத்துவ ஆராய்ச்சியில் முதலில் அறியவேண்டியது அவத்தை (அவத்தை 3. அதாவது: சாக்கிரம், சொப்பனம, சுழுத்தி. இதில், ஞானேந்திரியம் ஐந்தும் கூடி ஒன்று, கருமேந்திரியம் ஐந்தும் கூடி ஒன்று, வாயுவு ஐந்தும் கூடி ஒன்று, அந்தக்கரணங்கள் நான்கு, இந்த 7-ம் கூடினது சாக்கிரம்; ஞானேந்திரியம் கருமேந்திரியமாகிய இரண்டும் விடுபட்டு மீந்த அந்தக்கரணம் 4, வாயு ஒன்று ஆக ஐந்தும் கூடிநின்றது சொப்பனம்; இந்த ஐந்தில் அந்தக்கரணங்கள் 4-ம் விடுபட்டு வாயு ஒன்று மாத்திரமிருந்தது சுழுத்தி.)

(8) — (டாஷ்) இந்தக்குறியை ஒரு பெரும் வாக்கியத்முன்சுருக்கமாக ஒரே வார்த்தையை எழுதி அதன் பின் குறிப்பது. இதற்கு உதாரணம்.

(a) சகுனங்கள்.—ஆபத்துவருமுன் அதை உணர்ந்தும் ஜாடைகள் (குறிகள்) உண்டாவது வாஸ்தவமே. காரியாகாரியங்களின் நடைக்கிரமத்தைத் திட்டமாய் விசாரித்தறியும் அனுபவமுடையோர் இதற்கு ஆக்ஷேபம் சொல்லார். அக்குறிகள் அகோசரமான உலகத்தின் அந்தரங்க சங்கதிகளை வெளியிடுபவைகளும், அசரீரி வாக்குமாய் இருக்கின்றன என்பதற்கு ஐயம் இல்லை. அபாயமுண்டாகுமுன் அதைக் குறித்து அந்தக்குறிகள் நம்மை எச்சரிக்கும் நன்மையுள்ளவைகளாய் விளங்கினால் அவை நமது க்ஷேமத்தின்பொருட்டு நமது நன்மையை விரும்பும். அசரீரியாகிய ஏதோ ஒரு வஸ்துவினிடத்திலிருந்து வந்ததென்று நாம் உத்தேசித்தாலென்ன? அதில் என்ன தாழ்விருக்கிறது. அந்த வஸ்து சாக்ஷாத்கடவுள் தாமோ, சற்றுத்தாழ்ந்த பதவியில் இருப்பதோ வென்று நாம் விசாரிப்பது அவசியமல்ல. அந்தரங்கமான இவ்வெச்சரிப்பை ஜாக்கிரதையுடன் கண்டு நடந்தால் தீங்கு விளையாது.

(b) தெய்வசகாயம்.— அபாயகாலத்தில் ஜீவகோடிகள் அனைத்தையும் சிருஷ்டித்த மகத்தான கடவுள் நம்மைக் கைவிடாரென்று பூர்த்தியாய் நம்பி, நாம் கலக்கமற்றிருப்பதற்குப் பல முகாந்திரங்கள் உண்டு. அவர் தமது சிருஷ்டிகளைச் சிறிதும் ஆதரவின்றி கலங்கவிடார். மிகக்கொடிய ஆபத்து விபத்துகள் வருங்காலத்தில், அவர் அவர்களுக்கு ஏதாயினும் சகாயம் செய்வார். அவர்கள் சமீபத்தில் தமக்கு மீட்சியில்லை என்று பதறிக் கதறும்பொழுது, அவர்களுக்கு அதிசீக்கிரம் மீட்சியுண்டாவதும் உண்டு. இது பெரிதல்ல, தங்கள் நாசத்தை விளைவிக்குமென்று அவர்கள் எண்ணிய சாதனங்களே அவர்களைக் கடைத்தேறப் பண்ணும் சாதனங்களாயப் பலிப்பதும் உண்டு.)

(9-இது இரட்டை சொற்குறி. இதற்கு உதாரணம்.— டிஸ்திரிக்டு-முன்சீபு, சப் - மாஜிஸ்திரேட்டு, சப்-கலெக்டர்.

(10) * (தாரகைக்குறி) இது ஒரு வாக்கியத்திலுள்ள ஒரு சொல்லின் விவரத்தை அடியில் தெள்ளத்தெளியச்சொல்வதாக இடும் குறியாம். இதற்கு உதாரணம்—வேதமானது கர்மகாண்டம் * பத்திகாண்டம் † ஞானகாண்டம் என்று மூன்று காண்டங்களாகப் பிரியும்.

(11) † (சிலுவைக்குறி) இதையும் தாரகைக்குறி போலவே வைத்துக்கொள்க இதற்குள்ள உதாரணத்தையும் 10 வது கலத்திலேயே காண்க.

(12) Δ (மூலேக்குறி) இது வரிபிளந்தெழுதுவதற்கு இடும் குறியாகும். இதற்கு உதாரணம்.—இராககாலத்தில் எண்ணிறந்த தீபங்கள்போல விண்ணிற் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் ஒளிமழுங்கி இருளினும் இருளும்; காலேயில் கிழக்கே உதித்து மாலேயில் மேற்கே அஸ்தமிக்கும் Δ பகலவனுகிய சூரியன் அசலமாக ஓரிடத்தில் நிற்பினும் நிற்கும், எவருக்கும் பிரத்தியக்ஷமாகத் தோனறும் சத்தியம் அசத்தியமாகப புரளினும் புரளும்; என் தெய்வத்தின்மீது எனக்கு உள்ள அன்போ ஒருபொழுதும் அழியாது. இது உறுதியென்று கொள்க.

(13) ? (கேள்விக்குறி) இதற்கு உதாரணம்.—

(a) நானும் எனது வேலேயாட்களும் கொள்ளே காலம் வர ஆசனூர் காட்டில் வரும்போது அநேக துஷ்டவன விலங்குகள் ஒன்றைத்தொடர்ந்து மற்றொன்று வந்ததிறைல், அவை

---

* தேக – இருக – கிருத்தியாதிகளில் யானென தென்னும் அகமமதை யுள்ளவனென்பது கர்மகாண்டம்.

† சகலகிரியையும் ஈசுரார்ப்பணம் செய்தலென்பது பத்திகாண்டம்.

கள் ஆணும் பெண்ணுமோ? உல்லாசத்திற்கு விளையாடிக் கொண்டு வந்தனவோ? உக்கிரத்துடன் சண்டையிட்டு வந்தனவோ? அவை இவ்வாறு வருவது வழக்கமோ? அபூர்வமோ? எங்களுக்கு ஒன்றுந்தெரியவில்லை.

(b) இந்தியாவிலிருக்கும் டொப்பிக்காரர்கள் செய்யும் அநீதியைப்பற்றி இங்கிலாந்திலுள்ளோர்க்கு அறிந்தோர் சொல்லாமல் தெரியும் வகை எப்படி? இதற்காக சுதேச பத்திரிகைகளை பார்லிமெண்டார் தருவித்துப் பார்ப்பது நலம். பார்லிமெண்டார் என்ன, சாமானியரா? நீதிக்கு வரம்பு, அருளுக்கு இருப்பிடம், தயைதாட்சண்ணிய முள்ளவர்கள். ஸ்திதி அவர்களுக்கு ஐயந்திரிபறத் தெரிந்தால், அவர்கள் நமக்கு மனதார அநியாயம் செய்யமாட்டார்கள்.

(14) ! (ஆச்சரியம் அல்லது விசனக்குறி.) இதை 5-வது கலம் 2-வது கலத்தில் சொன்ன உதாரணத்தை உபயோகித்துப் பார்க்க.—இல்பர்ட்பில் பாசாகிறதா யிருப்பதினால், இந்தியாவிலுள்ள டொப்பிகள் "இனி நாம இப்பாழுடலை ஓம்பி உயிர் பிழைத்து, ஆம்பயனென்ன? தரைமுகத்தில் தண்டகாரமாய் விழுந்து, இந்துக்கள் பாதம்பணிந்து மானமழியவோ! கீழ்மக்கள் திட்டுக்கேட்டு, நாளொருவண்ணம் நையவோ! எதுக்கு இனி இங்கிருப்பது" என பிரலாபிக்கிறார்களாமே. இதென்ன ஆச்சரியம்! கிரிமினல் குற்றம் செய்தவர்களல்லவோ தண்டனைக்கு அகப்படுவார்கள். அகங்கரித்து குற்றஞ்செய்யாதவனுக்கு பயமேன்? இந்தபில் பாசாவதில் தடைசொல்வதேன்.

இக்குறிகள்தவிர × கூட்டல் குறி, —கழித்தல் குறி, பெருககல்குறி, ÷ வகுத்தல் குறி, = சமகுறி எனவும் இன்னும் பலவித குறிகளும் உண்டு. அவைகளை ஏகதேசமாக

நமது நண்பர்கள் அறிவார்கள் : ஆகையால், அவைகளை சொல்லாமல் இம்மட்டில் விடுவோம்.

வாசகத்திலாவது கவியிலாவது மேற்சொல்லியகுறிகளை கவனிக்கவேண்டியதுடன் சில சந்தர்ப்பங்களில் சில எழுத்துகளையும் தக்க இடத்தில் உபயோகிக்க முக்கியமாய் கவனிப்பது அவசியம். ந, ன, ர, ற, ள, ழ ஆகிய இந்த எழுத்துகளை தக்க இடத்தில் உபயோகிக்காவிட்டால் எவ்வாசகமும் எக்கவியும் ஆபாசமாய்விடும். இதை உதாரணத்தோடு சொல்வதற்கு இது சமயமல்ல; ஆதலால், அதைப்பற்றி சமையங்கண்டு பிரத்தியேகமாகச் சொல்வோம்.

ஷெ குறிகளையும், அவைகளுக்கு உதாரணங்களையும் நமது நுண்ணியஅறிவுக்குத்தோன்றியவண்ணம் கூறினோம். இதற்குச் சூத்திரங்களாவது, விதிகளாவது, இருக்குமாயின், அவைகளை நமது நண்பர்கள் பரிவுகூர்ந்து பத்திரிகை மூலமாய் விளம்பக்கேட்டுக்கொள்ளுகிறோம். நாம் அறிந்தமட்டில் இலக்கணத்திலாவது, நன்னூல் தொல்காப்பியத்திலாவது, இருப்பதாகத் தோன்றவில்லை. எவராவது மேற்சொன்னவைகளில் ஏதேனும் பிசகுகண்டால், அவைகளை எடுத்துச்சொல்லினும் நாம் ஏதும் மனக் குறையின்றி ஏற்று வந்தனம் புரிவோம். இந்தவாசகக்குறிகளைத் தெளிவாய் அறியவேண்டியே மேற்சொன்னவைகளை எடுத்துக்காட்டி இதைப் படிக்கும் அனைவரையும் தூண்டினோம்: ஆகையால், தெரிந்தோர் அனைவரும் எமக்குக் கற்பிப்பது நலம்; அது அனைவர்க்கும் உபயோகமாகும்.

முற்றிற்று.

1360
மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.